இராமநாதபுரம், தோட்டக்கலை துணை இயக்குநர்(பொ) அவர்களது செயல்முறை ஆணைகள்:-
முன்னிலை:திரு.செள.நாகராஜன்,பி.எஸ்ஸி(தோ.க).,

செ.மு.ஆ.எண்.பஅ1/944/ 2019 நாள்: 10.02.2020

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - தொகுதி-4-இல் அடங்கிய பணிகள் - நேரடித்தேர்வு 2017-18-ஆம் ஆண்டில் இளநிலை உதவியாளர்(பி.அ) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, தோட்டக்கலை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இராமநாதபுரம் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்திற்கு பணிநியமனம் செய்து ஆணை வழங்கியது - இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து, ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை-3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் குறிப்பாணை எண்.3055/PSD- C3/2018, நாள்: 28.11.2018.
2. சென்னை - 5, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர்(பணி மேலாண்மை) அவர்களின் செ.மு.ஆ.எண்: அநிபி5/139388/2018, நாள்: 05.03.2019.
3. சென்னை - 5, தோட்டக்கலை இயக்குநர் அவர்களின் செ.மு.ஆ.எண்: அபபி2/4193/2019, நாள்: 07.03.2019.
4. வேளாண்மை இயக்குநர், சென்னை - 5 அவர்களின் கடித எண்.அபபி.3/23567/2019, நாள்: 04.11.2019.

<><><><>

**ஆணை:**

பார்வை (1)-இல் காணும் குறிப்பாணையில் தெரிவித்துள்ளபடி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் 2017-18-ஆம் ஆண்டு தொகுதி-4-இல் நேரடி தேர்வின் மூலம் தற்காலிகமாக தெரிந்தெடுக்கப்பட்டு (Selected Provisionally) பார்வை (2)-இல் காணும் செயல்முறை ஆணையின் மூலம் தோட்டக்கலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள 3 இளநிலை உதவியாளர்களுக்கு ரூ.19500-62000(Level-8) என்ற ஊதிய விகிதத்தில், நடைமுறையில் உள்ள இதர படிகளுடன் தற்காலிக அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்திற்கு பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை (4)-இல் காணும் கடிதத்தில் இளநிலை உதவியாளர்களின் பணியினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் அறிவுரையின்படி, பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள 3 இளநிலை உதவியாளர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இளநிலை உதவியாளர்கள்(பிணையமற்றது) தமது பணியில் முறையாக நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தை திருப்திகரமாக (Completion of two years on duty within a continuous period of three years) முடிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டக்கலை துணை இயக்குநர்(பொ),
இராமநாதபுரம்.

இணைப்பு: பிற்சேர்க்கை.

த.பி.பா.

பெறுநர்:

1. திரு.சி.அருண்பாண்டியன், இளநிலை உதவியாளர் - இவ்வலுவலகம்.
2. செல்வி.சி.லீலாவதி, இளநிலை உதவியாளர் - இவ்வலுவலகம்.
3. திரு.பூ.அருண்பாண்டியன், இளநிலை உதவியாளர் - இவ்வலுவலகம்.

நகல்: வேளாண்மை இயக்குநர், சென்னை -5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை -5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: இருப்பு கோப்பு (பணிக்குழு "பஅ1" - பிரிவு)

உபரி - 1.

தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம்,
இராமநாதபுரம்.

## பிற்சேர்க்கை

| இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை குறித்த பிற்சேர்க்கை | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | பெயர்/பதவி | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய வரிசை எண் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
| 1. | திரு.சி.அருண்பாண்டியன், இளநிலை உதவியாளர். | 102 | 13.03.2019 முற்பகல் | 13.03.2019 முற்பகல் |
| 2. | செல்வி.சி.லீலாவதி, இளநிலை உதவியாளர். | 306 | 11.03.2019 முற்பகல் | 11.03.2019 முற்பகல் |
| 3. | திரு.பூ.அருண்பாண்டியன், இளநிலை உதவியாளர். | 352 | 13.03.2019 முற்பகல் | 13.03.2019 முற்பகல் |

தோட்டக்கலை துணை இயக்குநர்(பொ),
இராமநாதபுரம்.

10/02/2020